
கன்ஸ்தன்தீன்
பவுஸ்தோவ்ஸ்கி

குழம்பிப் போன ஊர்க்குருவி







கன்ஸ்தன்தீன் பவுஸ்தோவ்ஸ்கி

குழம்பிப் போன ஊர்க்குருவி


படங்கள்: ஸ்பர்தாக் கலசோவ்

மொழிபெயர்ப்பாளர்: இரா. பாஸ்கரன்



ராதுகா பதிப்பகம்
மாஸ்கோ

விற்பனையாளர்கள்
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட்
சென்னை



பழைய சுவர் கடிகாரத்தில் விளையாட்டு போர்வீரன் உயரத்திலிருந்த இரும்புக் கொல்லன் பொம்மை சுத்தியலை உயர்த்தியது. கடிகாரம் கிரீச்சிட்டது, சிறு தாமிர பட்டைக் கல்லில் கொல்லன் பொம்மை சுத்தியலால் தட்டி ஒலியெழுப்பியது. பரபரப்பான ஒலி அறையில் பட்டு எதிரொலித்து, புத்தக அலமாரியை அடைந்து அமைதியானது.

பட்டடைக் கல்லில் எட்டு முறை அடித்த கொல்லன் பொம்மை ஒன்ப தாவது முறையும் அடிப்பதற்காக ஓங்கியபோது அதன் கை நடுங்கி காற்றிலேயே நின்றது. பட்டடைக் கல்லில் ஒன்பது தடவை அடிக்கும் நேரம் வரும் வரை இவ்வாறு கை ஓங்கிய நிலையிலேயே அது ஒரு மணி நேரம் நின்றது.

ஜன்னலோரம் நின்ற மாஷா திரும்பிப் பார்க்கவே இல்லை. திரும்பிப் பார்த்தால் பெத்ரோவ்னு ஆயா விழித்து அவளைக் கண்டிப் பாக படுக்கைக்கு துரத்தி விடுவாள்.

பெத்ரோவ்னு சோபாவில் படுத்திருந்தாள், அம்மா வழக்கம் போல் நாடக மன்றத்துக்குச் சென்றிருந்தாள். அவள் அங்கே நடனமா டினுள். ஆனுல் ஒரு நாள் கூட மாஷாவை அங்கே கூட்டிப் போன தில்லை.

அந்த நாடக மன்றம் பெரிதாக, கல் தூண்களால் ஆனதாக இருந்தது. கட்டிடக் கூரையில் உயரே இரும்புக் குதிரைகள் நின்று கொண்டிருந்தன. தலையில் மலர் கிரீடம் சூடியிருந்த ஒருவன் குதிரைகளைப் பிடித்திருந்தான். அவன் வலிமையானவனுக, வீரம் மிகுந்தவனுக இருக்க வேண்டும். திமிறிப் பாய்ந்த குதிரைகளை அவன் கூரையின் கோடியில் தடுத்து நிறுத்தினுன். குதிரைகளின் முன்னங்கால்கள் சதுக்கத்தின் மேலே காற்றில் தொங்கின. அந்த மனிதன் மட்டும் இரும்புக் குதிரைகளை இழுத்துப் பிடித்திராவிடில் என்ன குழப்பம் ஏற்பட்டிருக்குமென மாஷா எண்ணிப் பார்த்தாள்: அவை கூரை மேலிருந்து சதுக்கத்தில் விழுந்து பெரும் ஒலியெழுப்பிய படியே போலீஸ்காரனைத் தாண்டி பாய்ந்து சென்றிருக்கும்.

கடைசி சில நாட்களாக அம்மா மிகவும் பரபரப்பாயிருந்தாள். முதன் முதலாக சின்டரேல்லா நடனத்தை ஆடுவதற்குத் தயாராகி வந்த



அவள் முதல் நாடகத்திற்கே பெத்ரோவ்ஞவையும் மாஷா வையும் கூட்டிச் செல்வதாக வாக்களித்திருந்தாள்.

அரங்கேற்றத்திற்கு இரண்டு நாட்கள் முன் அம்மா கைப்பையிலிருந்து மெல்லிய கண்ணுடியால் செய்யப்பட்ட பூச் செண்டை எடுத்தாள். மாஷாவின் அப்பா அதை பரிசாக அளித்திருந்தார். அவர் ஒரு மாலுமி. இப் பூச் செண்டை ஏதோ ஒரு தொலே தூர நாட்டிலிருந்து கொண்டு வந்திருந்தார்.

பின்னுல் மாஷாவின் தந்தை யுத்தத்திற்குச் சென்று ஒரு சில பாசிஸ்டு கப்பல்களை மூழ்கடித்தார், இரு முறை மூழ்கிஞர், காயமடைந்தார், ஆனுலும் உயிரோடிருந்தார். இப்போது அவர் ''கம்சாத்கா'' என்ற பெயருடைய ஒரு தொலே தூர இடத்தில் இருந்தார். திரும்ப நீண்ட நாளாகும், வசந்த காலத்தில்தான் திரும்புவார்.

அம்மா கண்ணுடி பூச் செண்டை வெளியில் எடுத்து அமைதியாக ஒரு சில வார்த்தைகளைச் சொன்னுள். இது ஆச்சரியமாயிருந்தது. ஏனெனில் முன்பெல்லாம் அம்மா சாமான்களோடு பேசியதில்லே.

''இதோ, இன்னமும் நீண்ட நேரம் காத்திருக்க வேண்டியதில்லே,'' என்று முணுமுணுத்தாள் அம்மா.

''எதற்கு என்று கேட்டாள், அம்மா?''

''நீ சின்னவள், உனக்கு ஒன்றும் புரியாது'' என்ருள் அம்மா. ''அப்பா இதை எனக்குப் பரிசளித்த போது, 'நீ முதன் முதலாக சின்டரேல்லா நடனம் ஆடும் போது அரண்மனேயில் விருந்து முடிந்ததும் கண்டிப்பாக ஆடையில் குத்திக் கொள். அந்நேரத்தில் நீ என்னேப் பற்றி நினேவு கூர்ந்தாய் என அப்போது நான் தெரிந்து கொள்வேன்' என்ருர்.''


''அப்ப எனக்கு புரியுது,'' என்று கோபமாகச் சொன்னுள் மாஷா.

''என்ன புரிந்தது?''

''எல்லாமே!'' என்று பதில் சொன்ன மாஷா வெட்கத்தால் சிவந்தாள். அவளே நம்பாத போது அவளுக்குப் பிடிக்காது.

கண்ணுடி பூச் செண்டை தன் மேசையில் வைத்த அம்மா, மாஷா அதைச் சுண்டு விரலால் கூட தொடக் கூடாது, ஏனெனில் அது எளிதில் நொறுங்கக் கூடியது என்ருள்.

 அன்று மாலே அப் பூச்செண்டு மாஷாவின் முதுகின் பின் மேசை





மீது பிரகாசித்தது. எல்லாமே — வீடு முழுவதும் ஜன்னல் பின்னுலிருந்த தோட்டமும் கீழே வாயிலில் இருந்த வெண்பனியால் மேன்மேலும் வலிமையாகி வந்த கல்லாலான சிங்கமும் — தூங்குவது போன்று அமைதியாக இருந்தது. மாஷாவும் கணப்பு வசதியும் பனிக்காலமும் மட்டும் தான் தூங்கவில்லே. மாஷா ஜன்னல் வழியே வெளியே பார்த்தாள், கணப்புக் கருவி மெதுவாகச் சத்தமிட்டுக் கொண்டிருந்தது, பனிக்கால வானம் மேன் மேலும் பனியைக் கொட்டிக் கொண்டிருந்தது. அப் பனி விளக்குகளேக் கடந்து சென்று நிலத்தில் வீழ்ந்தது. இவ்வளவு கருமை யான வானத்திலிருந்து இம்மாதிரியான வெண்பனி எப்படி வருகிறது என்பது புரியவில்லே. பனியும் குளிரும் இப்படி கடுமையாக இருக்கையில் அம்மாவின் மேசை மீதுள்ள கூடையில் பெரிய சிவப்பு நிறப் பூக்கள் எப்படிப் பூத்தன என்பதும் புரியவில்லே. முடி நரைத்த காக்காய் மிகவும் புரியாத புதிராக இருந்தது. அது ஜன்னலுக்கு வெளியே ஒரு மரக் கிளேயில் உட்கார்ந்து கொண்டு கண்ணிமைக்காமல் மாஷாவைப் பார்த்துக் கொண்டிருந்தது.

இரவு நேரத்தில் அறையில் காற்ருேட்டம் சிறிது இருப்பதற்காக பெத்ரோவ்ஞ ஆயா எப்போது ஜன்னல் கதவைத்திறந்து விட்டு மாஷாவை முகம் கழுவுவதற்காக இட்டுச் செல்வாள் என்று அந்தக் காகம் காத்திருந்தது.


பெத்ரோவ்ஞவும் மாஷாவும் போனதுமே காகம் ஜன்னல் கதவு வழியே அறையின் உள்ளே நுழைந்து கண்ணில் பட்ட முதல் பொருளே எடுத்துக் கொண்டு நழுவியது.

காகம் அவசர அவசரமாகச் சென்றதால் தன் கால்களே மிதியடியில் தேய்க்க மறந்து மேசையின் மீது ஈரச் சுவடுகளே விட்டுச் சென்றது.

பெத்ரோவ்ஞ ஒவ்வொரு முறை அறைக்குத் திரும்பும் போதும் கைகளே உயரத் தூக்கி கத்திஞள்:

''திருட்டுக் காக்கை! திரும்பவும் எதையோ எடுத்துக் கொண்டு போய் விட்டது!''

மாஷாவும் பெத்ரோவ்ஞவுடன் சேர்ந்து கைகளே உயரத் தூக்கி அலுத்துக் கொண்டபடியே இம்முறை காகம் எதை எடுத்துச் சென்றது என்று அவசர அவசரமாகத் தேட ஆரம்பிப்பாள். பெரும்பாலும் காகம் சர்க்கரை, பிஸ்கெட், சாஸேஜ் ஆகியவற்றையே எடுத்துச் சென்றது.





பனிக் காலத்திற்காக மூடிக் கிடந்த பெட்டிக் கடையில் காகம் வசித்தது. கோடைக் காலத்தில் இங்கே ஐஸ்கிரீம் விற்பார்கள். அது கஞ்சத் தனமான, இடக்கு பண்ணும் காகமாக இருந்தது. தனது செல்வம் அனைத்தையும் குருவிகள் எடுத்துக் கொள்ளக் கூடாது என்பதற்காக இது தனது அலகால் இவற்றை ஓட்டை வழியே பெட்டிக் கடையினுள் போட்டது.

சில நேரங்களில், குருவிகள் பெட்டிக் கடையினுள் நுழைந்து ஓட்டைகளிலிருந்து உறைந்து போன சாஸேஜ் துண்டுகள், ஆப்பிள் தோல் மற்றும் சாக்லேட் மீதுள்ள பளபளக்கும் காகிதம் ஆகியவற்றை எடுப்பதாக இரவு நேரத்தில் காக்கைக்கு கனவுகள் வருவதுண்டு. அப்போது கனவில் காக்கை காகா என்று கரையும். பக்கத்து மூலையிலிருந்து போலீஸ்காரன் இதைக் கேட்டுக் கொண்டிருப்பான். இரவு நேரங்களில் பெட்டிக் கடையிலிருந்து அவன் நீண்ட காலமாகவே காகம் கரைவதைக் கேட்டிருக்கிறான். ஒரு சில தடவை அவன் அப்பெட்டிக் கடையை அணுகி தெரு விளக்கு ஒளியை கைகளால் மூடி மறைத்துக் கொண்டு உள்ளே பார்த்தான். பெட்டிக் கடையினுள் ஒரே இருட்டாக இருந்தது, தரையில் உடைந்த பெட்டி கிடந்தது மட்டும் வெள்ளையாகத் தெரிந்தது.

ஒரு நாள் காகம் பெட்டிக் கடையினுள் பாஷ்கா எனும் சிறிய குழம்பிய குருவியைக் கண்டது.

குருவிகளுக்கு வாழ்க்கை கடினமானதாக இருந்தது. நகரத்தில் கிட்டத்தட்ட குதிரைகளே இருக்கவில்லையாதலால் ஓட்ஸ் தானியம் மிகக் குறைவாகவே கிடைத்தது. முன்பெல்லாம் குருவிக் கூட்டங்கள் நாள் முழுவதும் குதிரை வண்டிகள் நிற்கும் இடங்களையே மொய்த்துக் கொண்டிருக்கும் என்று பாஷ்காவின் தாத்தாவாகிய ''சிச்கின்'' என்ற வயதான குருவி சில நேரங்களில் நினைவு கூரும். அந்த இடங்களில் ஓட்ஸ் தானியம் குதிரைகளின் உணவுப் பைகளில் இருந்து கீழே சிந்தியிருக்கும்.

இப்போது நகரத்தில் இயந்திர வாகனங்கள் மட்டுமே இருந்தன. இவை ஓட்ஸ் தானியத்தை உண்பதில்லை, நல்ல அன்பான குதிரைகள் தின்பதைப் போல் இவை அசை போடுவதில்லை, மாறாக, கடுமையான வாசனையை உடைய ஏதோ ஒரு நச்சுத் தண்ணீரை குடிக்கின்றன. எனவே இப்போது குருவி கூட்டங்கள் குறைந்து விட்டன. ஒரு சில

குருவிகள் குதிரைகளுக்கு அருகே இருப்பதற்காக கிராமங்களுக்குச் சென்றன, மற்ற குருவிகள் கடலோர நகரங்களுக்குச் சென்றன. அந் நகரங்களில் கப்பல்களில் தானியங்களை ஏற்றி இறக்கியதால் குருவிகளின் வாழ்க்கை அங்கே மகிழ்ச்சிகரமானதாக இருந்தது, அவற்றின் வயிறும் நிரம்பியது.

''முன்பெல்லாம் குருவிகள் இரண்டாயிரம், மூவாயிரம் சேர்ந்து கூட்டமாகப் பறக்கும். சிறகடித்து இவை மேலே வானில் உயரப் பறந்தால் மக்கள் மட்டுமின்றி வண்டியிழுக்கும் குதிரைகள் கூட 'ஆண்டவனே, காப்பாற்றேன்! இந்த பைத்தியக்காரக் குருவிகளை யாராலுமே கட்டுப்படுத்த முடியாதா?' என்று நினைக்கும்'' என சிக்கின் கூறினான்.

''சந்தைகளில் எப்படிப்பட்ட குருவிச் சண்டைகள் நடைபெற்றன! குருவிச் சிறகுகள் மேக மூட்டமாக எழுந்தன. இப்போதெல்லாம் இத் தகையச் சண்டைகளை ஒரு போதும் அனுமதிப்பதே இல்லை...''

பாஷ்கா பெட்டிக் கடையினுள் நுழைந்ததுமே, அது ஓட்டையிலிருந்து எதையும் எடுக்கும் முன்னரே காகம் பாஷ்காவைப் பிடித்தது. அது பாஷ்காவின் தலையில் தன் அலகால் குட்டியது.

பாஷ்கா கீழே விழுந்து, கண்களை மூடிக் கொண்டு இறந்தது போல் பாசாங்கு செய்தது.

காகம் அதை பெட்டிக் கடையிலிருந்து வெளியே வீசி விட்டு காகா என்று கத்தி உலகிலுள்ள எல்லா திருட்டு குருவிகளையும் திட்டித் தீர்த்தது.

போலீஸ்காரன் சுற்று முற்றும் பார்த்து விட்டு பெட்டிக் கடையை நெருங்கிச் சென்றான். பாஷ்கா வெண் பனியின் மீது கிடந்தது. தலை வலியால் உயிர் போய் கொண்டிருக்க தன் அலகை மட்டும் மெதுவாகத் திறந்தது.

''அட, அநாதைக் குருவியே!'' என்று சொல்லிய போலீஸ்காரன் தன் கையுறையைக் கழட்டி அதில் பாஷ்காவைச் சுற்றி எடுத்து தன் பாக்கெட்டில் போட்டுக் கொண்டான். ''கஷ்டமான வாழ்க்கை உனக்கு!''



பாக்கெட்டில் கிடந்த பாஷ்கா கண்களைச் சிமிட்டி, மனப்புண்ணாலும் பட்டினியாலும் அழுதது. இப்போது கொறிப்பதற்கு மட்டும் ஏதாவது ஒன்று கிடைத்தால் எவ்வளவு நன்றாயிருக்கும்! ஆனால் போலீஸ்காரன் பாக்கெட்டில் ரொட்டித் துண்டுகள் எதுவும் இல்லை, பயனற்ற புகையிலைத் தூள்கள்தான் இருந்தன.



காலையில் பெத்ரோவ்னுவும் மாஷாவும் பூங்காவிற்கு உலாவச் சென்றனர். போலீஸ்காரன் மாஷாவைக் கூப்பிட்டு கண்டிப்பான குரலில் கேட்டான்:

''பெண்ணே! குருவி வளர்ப்பதற்கு வேண்டுமா?''

தனக்கு நிறைய குருவிகள் தேவைப்படுகின்றன என்று மாஷா பதிலளித்தாள். உடனே போலீஸ்காரனின் சிவந்த, வெய்யிலிலும் மழையிலும் அடிபட்ட முகத்தில் சுருக்கங்கள் விழுந்தன. அவன் சிரித்துக் கொண்டே கையுறையில் சுற்றப்பட்ட பாஷ்காவை வெளியில் எடுத்தான்:

''கையுறையோடு எடுத்துக்குங்க. இல்லாட்டி பறந்து போயிடும். பின்னுல் கையுறையை கொண்டு வந்து தாங்க. நான் 12 மணிக்கு முன்னுடி என்னேட இடத்திலிருந்து போக மாட்டேன்.''

மாஷா, பாஷ்காவை வீட்டிற்கு கொண்டு வந்து, அதன் சிறகுகளை பிரஷ்ஷால் வாரிவிட்டு, இரை கொடுத்து பறக்கவிட்டாள். பாஷ்கா சிறு சாசர் தட்டில் உட்கார்ந்து தேநீர் அருந்தியது, பின் கடிகாரத்திலிருந்த கொல்லன் பொம்மையின் தலை மீது உட்கார்ந்து, கண்ணயரத் தயாரானது. ஆனுல் கொல்லன் பொம்மை இறுதியாகக் கோபங்கொண்டு சுத்தியலை வீசி பாஷ்காவை அடிக்க விரும்பியது. பாஷ்கா சத்தம் போட்டுப் பறந்து, பல பிரபல கதைகளை எழுதிய இவான் கிரிலோவ் என்பவரின் வெண்கலச் சிலையின் தலை மீது உட்கார்ந்தது. தலைப் பகுதி வழவழப்பாயிருந்ததால் பாஷ்கா நழுவிக் கீழே விழும் நிலையிலிருந்தது. கொல்லன் பொம்மை கோபம் கொண்டது போல் பட்டடைக் கல்லில் அடிக்க ஆரம்பித்து பதிஞேரு தடவை அடித்தது.

ஒரு நாள் பூராவையும் மாஷாவின் அறையில் கழித்த பாஷ்கா, மாலையில் வயதான காகம் ஒன்று ஜன்னல் கதவு வழியாக அறையினுள் நுழைந்து மேசை மீதிருந்த காய்ந்த மீன் தலையை எடுத்துச் சென்றதைப் பார்த்தது. பாஷ்கா, சிவப்பு பூக்களிருந்த கூடைக்குப் பின் மறைந்து கொண்டு அமைதியாக ஒளிந்திருந்தது.

அன்று முதல் பாஷ்கா ஒவ்வொரு நாளும் மாஷாவிடம் பறந்து வந்து சாப்பிட்டு விட்டு மாஷாவிற்கு எப்படி நன்றி சொல்வது என்று சிந்தித்தது. ஒரு நாள் அது உறைந்து போன கம்பளிப் பூச்சியைக் கொண்டு வந்து மாஷாவிற்குத் தந்தது. பாஷ்கா இதை பூங்காவில் ஒரு மரத்தில் கண்டெடுத்தது. ஆனுல் மாஷா கம்பளிப் பூச்சியை சாப்பிட





வில்லை. பெத்ரோவ்னு கோபங்கொண்டு கம்பளிப் பூச்சியை ஜன்னலுக்கு வெளியே விட்டெறிந்தாள்.

அப்போது பாஷ்கா, வயதான காகத்திற்கு கோபமூட்டும் வழியாக, காகம் திருடிச் சென்ற பொருட்களை பெட்டிக் கடையிலிருந்து லாவகமாக மாஷாவிற்கு திரும்பிக் கொண்டு வர ஆரம்பித்தது. ஒரு முறை காய்ந்து போன ஜாம், மறு முறை கல் மாதிரி கெட்டியாகிப் போன பனியாரம், இன்னொரு முறை சிவப்பு சாக்லேட் காகிதம் என்று கொண்டு வந்தது.

அநேகமாக மாஷாவிடம் மட்டுமில்லாமல் மற்ற வீடுகளிலும் அந்த காகம் திருடியிருக்க வேண்டும். ஏனெனில் பாஷ்கா சில சமயங்களில் தவறுதலாக மற்றவர் பொருட்களை — சீப்பு, படம், சீட்டுக் கட்டின் ஒரு கார்டு மூலை, நல்ல பவுண்டன் பேனுவின் தங்க நிப்பு போன்றவற்றை — எடுத்து வந்தது.

பாஷ்கா இப் பொருட்களோடு அறையினுள் பறந்து வந்து அவற்றை தரையில் போட்டு விட்டு அறையைச் சுற்றி சில வட்டங்கள் அடித்து விட்டு பின் சிறிய குண்டைப் போல் அறையிலிருந்து பாய்ந்து ஜன்னல் வழியாக வெளியே சென்று மறைந்தது.


அன்று மாலை பெத்ரோவ்னு ஏனோ நீண்ட நேரமாக எழுந்திருக்கவில்லை. காகம் ஜன்னல் கதவு வழியே எப்படி நுழைகிறது என்று பார்க்க மாஷாவிற்கு ஆசையாக இருந்தது. அவள் இதை ஒரு முறை கூட பார்த்ததில்லை.


மாஷா ஸ்டூல் மீதேறி ஜன்னல் கதவைத் திறந்து விட்டு அலமாரி பின்னுல் ஒளிந்து கொண்டாள். முதலில் நிறைய வெண்பனி ஜன்னல் கதவு வழியே உள்ளே வந்து தரையில் விழுந்து உருகி தண்ணீராகியது. பின் திடீரென ஏதோ முறியும் சத்தம் கேட்டது. காகம் அறையினுள் நுழைந்து அம்மாவின் மேசை மீது பாய்ந்து ஏறி கண்ணுடியில் பார்த்து சிறகுகளை படபடவென அசைத்தது. தன்னைப் போன்ற ஒரு கொடூர காகத்தைக் கண்ணுடியில் பார்த்த அது காகா என கத்தி விட்டு கண்ணுடி பூச்செண்டை திருடிக் கொண்டு ஜன்னல் வழியே பறந்து சென்றது.

மாஷா அலறினுள். பெத்ரோவ்னு எழுந்து, முணகினுள், திட்டினுள். அம்மா நாடக மன்றத்திலிருந்து திரும்பியதும் நீண்ட நேரம் அழுததைப்









பார்த்து மாஷாவும் சேர்ந்து அழுதாள். துக்கமடைய வேண்டாம் என்றும் முட்டாள் காகம் கண்ணுடி பூச் செண்டை வெண்பனியில் எறிந்திராவிடில் அதைக் கண்டு பிடித்து விடலாமென்றும் பெத்ரோவ்னு ஆறுதல் சொன்னுள்.

காலையில் பாஷ்கா பறந்து வந்தது. கிரிலோவ் வெண்கலச் சிலையின் தலையில் ஓய்வெடுப்பதற்காக உட்கார்ந்த அது திருடப்பட்ட பூச் செண்டைப் பற்றிக் கேள்விப் பட்டதும் சிறகுகளை அடித்துக் கொண்டே சிந்திக்க ஆரம்பித்தது.




பிறகு அம்மா ஒத்திகைக்காக நாடக மன்றத் திற்குச் சென்றபோது பாஷ்கா அவள் பின் சென்றது.

அது குறிப் பலகையிலிருந்து தெரு விளக்கு கம்பத்திற்கும் அங்கிருந்து மரங்களின் உச்சிக்குமாகத் தாவிப் பறந்து நாடக மன்றத்தை அடைந்தது. அங்கே அது இரும்புக் குதிரை ஒன்றின் மீது உட்கார்ந்து அலகைச் சுத்தப்படுத்தி, கால்களால் கண்ணிமைகளை தடவி விட்டு கீச்சென கத்தி பின் பறந்து மறைந்தது.

மாலையில் அம்மா மாஷாவிற்கு அழகிய வெண்ணிற ஏப்ரன் அணிவித் தாள். பித்ரோவ்னு ஒரு பழுப்பு நிற சில்க் சால்வையைப் போர்த்திக் கொண்டாள். மூவரும் நாடக மன்றம் சென்றனர். அதே நேரத்தில் சிச்கினின் கட்டளைப்படி பாஷ்கா சுற்றுவட்டாரத்தில் இருந்த குருவிகளை எல்லாம் ஒன்று திரட்டியது. குருவிகள் கூட்டமாகச் சேர்ந்து கண்ணுடி பூச்செண்டு ஒளித்து வைக்கப்பட்டிருந்த காக்கையின் பெட்டிக் கடையைத் தாக்கின.

குருவிகள் பெட்டிக் கடையை உடனே தாக்க முடிவு செய்யாது, முதலில் பக்கத்திலிருந்த கூரைகளில் உட்கார்ந்து காகத்திற்கு ஆத்திர மூட்டின. காகம் கோபம் கொண்டு பெட்டிக் கடையிலிருந்து பறந்து வருமென அவை நினைத்தன. அப்படி வெளியே வந்தால் பெட்டிக் கடையை விட தெருவில் விசாலமாக இருக்குமாதலால் ஒரே நேரத்தில் எல்லா குருவிகளும் சேர்ந்து காகத்தின் மீது பாயலாம், சண்டையிடலாம் என்று அவை எண்ணின. ஆனுல் காகத்திற்கு குருவிகளின் தந்திரங் கள் தெரியுமாதலால் அது பெட்டிக் கடையிலிருந்து வெளியே வரவே யில்லை.

இறுதியாக குருவிகள் தைரியத்தை எல்லாம் திரட்டி ஒன்றன் பின்



ஒன்றாக பெட்டிக் கடையினுள் நுழைந்தன.

பெட்டிக் கடையினுள் ஏற்பட்ட கூச்சல், குழப்பம், சத்தத்தில் விரைவிலேயே கடையைச் சுற்றி ஒரு கும்பல் சூழ்ந்தது.

போலீஸ்காரன் ஓடிவந்தான். பெட்டிக் கடையினுள் எட்டிப் பார்த்த அவன் அதிர்ச்சியடைந்தான்: கடையினுள் ஒரே குருவிச் சிறகுகள் பறந்ததில் ஒன்றும் தெளிவாகத் தெரியவில்லை.

''இதுதான் உண்மையான சண்டை'' என்று சொன்ன போலீஸ்காரன் பெட்டிக் கடையினுள் போய் சண்டையை நிறுத்துவதற்காக கடையை அடைத்திருந்த மரப் பலகைகளை அகற்றத் துவங்கினான்.


அதே நேரத்தில் நாடக மன்ற இசைக் குழுவில் இருந்த எல்லா இசைக் கருவிகளும் இசைக்கத் துவங்கின.


உயரமான ஒரு மனிதன் தனது வெளிறிய கையை மெதுவாக உயர்த்த, வலுத்து வந்த இசையின் பின்னணியில் வெல்வெட் திரை மெதுவாகத் திறந்தது. பெரிய, அலங்கரிக்கப்பட்ட அறையை மாஷா பார்த்தாள். சூரியனின் மஞ்சள் நிற ஒளியில் மிளிர்ந்த அந்த அறையில் அசிங்கமாக, ஆடம்பரமாக ஆடையணிந்திருந்த இரு மாற்றுந்தாய் சகோதரிகளையும், கொடிய மாற்றுந்தாயையும், பழைய சாம்பல்நிற ஆடையிலிருந்த மெலிந்த, அழகான தன் தாயையும் மாஷா கண்டாள்.

''சின்டரேல்லா!'' என்று மெதுவாக கிரீச்சிட்ட மாஷாவால் மேற்கொண்டு தன் கண்களை மேடையிலிருந்து அகற்ற முடியவில்லை.

மேடையில் நீல, ரோஜா, தங்க, நீல நிறங்களின் கலவையில் அரண்மனை தோன்றியது. இதிலிருந்து வெளியே ஓடி வந்த அம்மா மாடிப் படியில் கண்ணாடி காலணியை இழந்தாள்.

அம்மா சோகமாயிருந்த போதும் மகிழ்ச்சியடைந்த போதும், வயலின்களும் ஓபோ என்ற இத்தாலியக் கிளாரினெட்களும் புல்லாங்குழல்களும் பேரிசைக் கொம்புகளும் அன்பான உயிருள்ள பொருட்களைப் போல சோகமடைவதையும் மகிழ்ச்சியடைவதையும் கேட்க நன்றாக இருந்தது. அந்த உயரமான இசையமைப்பாளரோடு சேர்ந்து இவையும் அம்மாவிற்கு சகல விதங்களிலும் உதவ முயன்றன. சின்டரேல்லாவிற்கு உதவி புரிவதில் அவர் அவ்வளவு மும்முரமாய் இருந்ததால் ஒரு முறை கூட பார்வையாளர் அரங்கை நோக்கித் திரும்பவில்லை.





இது வருந்தத் தக்கது ஏனெனில் அரங்கில் குதூ குலக் களிப்பால் மின்னிய கன்னங்களையுடைய பல குழந்தைகள் இருந்தனர்.

ஒரு போதும் நாடகங்களைப் பார்க்காது, நிகழ்ச்சி நிரல்களையும் பெரிய கருப்பு நிற பைஞ்சுலர்களையும் தாங்கியபடி வாயிலில் நிற்கும் பழைய வாயிலோர்கள் கூட சத்தமின்றி அரங்கினுள் வந்து முதுகின் பின் கதவு களை மூடி விட்டு மாஷாவின் அம்மாவைப் பார்த்துக் கொண்டிருந்தனர். இவர்களில் ஒருவர்தன் கண் களைத் துடைத்துக் கொண்டார். தன்னைப் போன்றே வாயிலில் நின்றவரும் இப்போது இறந்து விட்டவரு மான சக தோழனின் பெண் இவ்வளவு அழகாக நடனமாடும் போது கண்களில் தண்ணீர் வராதா என்ன.

இறுதியாக நாடகம் முடிந்து, இசை மிகுந்த சத்தமாக ஒலித்து மகிழ்ச்சியை அறிவித்த போது பார்த்தவர்கள் எல்லோரும் தமக்குள்ளே புன்னகை பூத்தனர். மகிழ்ச்சிகரமான சின்டரேல்லாவின் கண் களின் ஏன் கண்ணீர் இருக்கிறது என்பது மட்டும் அவர்களுக்குப் புரியவில்லை. அந்த நேரத்தில் நாடக மன்ற படிகளில் அலைந்து திரிந்த குழம்பிப் போன சிறு குருவி ஒன்று பார்வையாளர் அரங்கில் நுழைந்தது. அது கடின மான சண்டையிலிருந்து வந்துள்ளது என்பது உடனேயே தெரிந்தது.



நூற்றுக் கணக்கான விளக்குகளின் ஒளி வெள்ளத்தில் அதன் கண்கள் கூசியதால் அது மேடையைச் சுற்றி வந்தது. கண்ணுடி லையைப் போன்ற ஏதோ ஒன்று அதன் அலகிலிருந்து பளபளப்பதை எல்லோரும் பார்த்தனர்.

அரங்கில் ஓசை எழும்பி ஓய்ந்தது. இசையமைப்பாளர் கையை உயர்த்தி இசைக் குழு வாசிப்பதை நிறுத்தினர். மேடையில் என்ன நடக்கிறது என்பதைப் பார்ப்பதற்காக பின் வரிசைகளில் இருந்த வர்கள் எழுந்து நின்றனர். குருவி சின்டரேல்லாவை நோக்கிப் பறந்து வந்தது. சின்டரேல்லா குருவியை நோக்கி கையை நீட்ட, விரித்த அவள் கைகளில் குருவி கண்ணுடி பூச்செண்டைப் போட்டது. சின்டரேல்லா தன் நடுங்கும் கைகளால் அதை தன் மேலாடையில் குத்திக் கொண்டாள்.

இசையமைப்பாளர் தன் சிறு குச்சியை அசைக்கவும் இசைக்குழு முழுங்கியது. கர ஒலியால் நாடகமன்ற விளக்குகள் ஆடின. குருவி விட்டத்தை நோக்கிப் பறந்து விளக்கில் அமர்ந்து சண்டையில் சிதறிப் போயிருந்த தன் சிறகுகளை சுத்தப்படுத்த ஆரம்பித்தது.

சின்டரேல்லா தலை வணங்கிச் சிரித்தாள். மாஷாவிற்கு மட்டும் அது தன் அம்மா என்று தெரிந்திராவிட்டால் அது தன் அம்மா என்று கண்டுபிடித்திருக்கவே மாட்டாள்.

பின்னால் வீட்டில் இரவு வந்து எல்லோரும் தூங்க ஆரம்பித்ததும் தூக்கக் கலக்கத்தில் மாஷா அம்மாவைக் கேட்டாள்:

''நீ பூச் செண்டைக் குத்திக் கொண்ட போது அப்பாவைப் பற்றி நினைத்தாயா?''

''ஆம்,'' என்று பதில் சொன்ன அம்மா மௌனமானாள்.

''நீ ஏன் அழுகிறாய்?''

''உன் அப்பாவைப் போன்ற மனிதர்கள் உலகில் இருக்கின்றார்கள் என்பதை நினைத்து மகிழ்கிறேன்.''

''பொய்,'' என்று முணுமுணுத்த மாஷா, ''சந்தோஷத்தால் சிரிப்பார்கள்'' என்றாள்.

''சின்ன சந்தோஷத்தால் சிரிப்பர்கள், பெரிய சந்தோஷத்தால் அழுவார்கள்,'' என்று பதில் சொன்ன அம்மா. ''இப்போது தூங்கு!'' என்றாள்.

மாஷா தூங்கினாள். பெத்ரோவ்னாவும் தூங்கிப் போனாள். அம்மா ஜன்னலோரமாகச் சென்றாள். ஜன்னலுக்கு வெளியே மரக் கிளையில் பாஷ்கா தூங்கிக் கொண்டிருந்தது. எங்கும் நிசப்தமாக இருந்தது. மேகத்திலிருந்து மேன்மேலும் விழுந்து கொண்டிருந்த பெரிய வெண்பனி இந் நிசப்தத்தை இன்னமும் அதிகப்படுத்தியது. இரவில் பனி விழுவதைப் போன்றுதான் மகிழ்ச்சிகரமான கனவுகளும் நல்ல கதைகளும் மக்களுக்கு வருகின்றன என்று அம்மாவிற்குத் தோன்றியது.





К. Паустовский
РАСТРЁПАННЫЙ ВОРОБЕЙ
На тамильском языке


K. Paustovsky
THE RUFFLED SPARROW
In Tamil




சோவியத் நாட்டில் அச்சிடப்பட்டது









ராதுகா பதிப்பகம்
மாஸ்கோ

விற்பனையாளர்கள்
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட்
சென்னை

ISBN 5-05-000337-7